செய்தித்தாளாகப் பதிவுபெற்றது: வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புந்-அசு] யாழ்ப்பாணம் - ஆனந்த ஸு கார்த்திகைமீ உக-உ வெள்ளிக்கிழமை (6-12-1974) [இல: நந

# சற்குருமணியின் நாமம் வாழ்க!

## நாவலர் பெருமான் சமய மறுமலர்ச்சியாளன்

நல்லூரில் திரு. சிவரத்தினம் உரை

வேதாகம நெறி நின்ற சைவ சமய உண்மைகளை உலகுக்கு எடுத்துக் காட்டி சமயத்துக்குப் புத்துணர்ச்சி ஊட்டியவர் நாவலர் பெருமான். அவர் செய்த பணிகளைச் சைவத் தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமுடியாது.

இவ்வாறு சைவபரிபாலன சபை பரீட்சைக் காரியதரிசி சி. சிவரத்தினம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை சிலை மண்டபத்தில் பூரணைத்தின நிகழ்ச்சியில் நாவலர் சமயத் தொண்டு என்னும் விடயம் பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் நீதியும நேர்மையும் நமது சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களாகும் நாவலர் ஒரு நீதிமான் நேர்மை தவறுதவர் பஞ்சமா பாதகங்களை அறவே நீக்கி சைவமக்கள் புனிதமாக வாழ வேண்டுமெனவும் தர்மச் சொத்துக்களைச் சிவசொத்தெனப் பேணிப் பாதுகாக்க வேண்டுமெனவும் விளக்கிக் காட்டியவர்.

ஆலயங்கள் வேதாகம முறைப்படி நடக்கவேண்டும அதற்காக சைவப்பிரகாச மடாலயங்கள் ஆகமவகுப்புக்களை நடத்தவேண்டும். அர்ச்சகர்களை சமய அறிவுள்ளவர்களாக அமைக்க வேண்டுமெனவும் வலியுறுத்திக் கூறியவர் நாவலர். தமிழும சமயமும் ஒன்றிணைந்தவை இவை இரண்டினையும் இரு கண்மணிகளாகக் கருதி தம் வாழ் நாள் முழுதும பணி புரிந்தார்

இன்றைய நிலையில் கோயில் வருவாயின் ஒரு பகுதியை வேதாகம வகுப்புக்களை நடாத்திப் பயன்படுத்த வேண்டுமெனவும திரு. சிவரத்தினம் குறிப்பிட்டார்.

அதன் பின் செல்வி நவமணி நாகலிங்கம் அவர்களின் பண்ணிசைக் கச்சேரியும் நடைபெற்றது. திரு. இ. முருகேசபிள்ளை அனைவர்க்கும் நன்றிதெரிவித்தார்.



திருவே யருட்செல் வமேசிவ மேசிவ சிற்சுகமே
மருவே மருவின் மலரே மலர்க்கற்பக வனமே
கருவே விரித்தெமை யாண்டிட நீயுருக் கொண்டனையே
குருவேஎம் ஆறுமுக நாவலசற் குருமணியே!

பூதலம் வாழ்கதண் பொன்முகில் வாழ்க புவியரசர்
வேதசி வாகம மெய்த்தமிழ் வேதம் விளங்குசிவ
போதசித் தாந்தமன் னீடு வாழ்கமெய்ப் பூரண!வெங்
கோதகல் ஆறு முகநா வலசற் குருமணியே!

—சற்குருமணிமாலை

நாவலர் பெருமானுடைய 95-ஆவது குருபூசைத் தினம் 5—12—74 வியாழக்கிழமை நிகழ்ந்தது. சைவ மக்கள் அவருடைய தூய வாழ்க்கை முறையையும உபதேசங்களையும் பின்பற்றி சைவ வாழ்க்கையை நடாத்தி இறைவனுடைய அருளைப் பெறுவார்களாக, இக்காலம் சைவசமயத்தையும் தமிழமொழியையும் காப்பாற்றுவதற்கு அவருடைய தவ வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்வதே தக்க நெறியாகும்.

## சிதம்பரத்தில் நாவலர் விழா

### "இந்துசாதனம்" ஆசிரியர் தலைமையில் சிறப்புற நடைபெற்றது

சிதம்பரம் நாவலர் உயர் நிலைப் பள்ளியில் நாவலர் பெருமான் குருபூசை இந்துசதனம் பிரதம ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் 5-12-74 வியாழக்கிழமை நடைபெற்றது

சித்தாந்தப் புலவர் திரு. முருக. தப்பிரகாசா எம். ஓ. எல். அவர்களும், தமிழ் வித்துவான் திரு. எம். குஞ்சிதபாததேசிகர் அவர்களும் சிறப்புரை நிகழ்த்தினுர்கள் சட்டசபை உறுப்பினர் திரு. பொ. சொக்கலிங்கம் எம். எல். ஓ. பாராட்டுரை வழங்கினுர்கள்

காலை 7-30 மணிக்கு சேக்கிழார் கோயிலில் விநாயகர் வழிபாடு நடைபெற்றது அதைத் தொடர்ந்து நாவலர் பெருமான் திருவுருவச் சிலையும் முதற்பதிப்பு நூற் சுவடிகளும் சேக்கிழார் கோயிலிருந்து உயர் நிலைப்பள்ளிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

9-15 மணிக்கு பள்ளி மன்றத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி மாலை 7-00 மணிவரை நடைபெற்றன.

## பசிப்பிணியும் நாவலரும்

### மணிமண்டப விழாவில் பண்டிதமணி

நாவலர் காலத்துப் பசிப்பிணியின் கொடுரத்தையும் அன்று அரசாங்கம ஏழைக் கமக்காரர்களுக்கு அநுமதித்த விதை நெல்லை முறை செய்யாத தன்மையையும் அதனையோட்டி நாவலர் பெருமான் போர் தொடுத்த நிகழ்ச்சியினையும் **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** அவர்கள் நேற்றைய தினம் [5-12-74] காலை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நிகழ்ந்த நாவலர் குருபூசை விழாவிற்கு அனுப்பிவைத்த ஆசி உரையில் தொட்டுக்காட்டியுள்ளார்கள்.

பண்டிதமணி அவர்களின் ஆசியுரை வருமாறு:-

பசிப் பிணியின் கொடூரமும், கால மழையின்மையும் உயிர் வர்க்கங்களை வதைக்கின்றன. இந்தக் கொடிய நிகழ்ச்சிகள், சென்ற நூற்றுண்டில் பஞ்சமும் நோயும் பரவிய காலத்தில் நாவலர் அவர்கள் நடத்திய கஞ்சித் தொட்டித் தருமங்களையும், ஏழைக் கமக்காரர்களுக்கு அரசாங்கம் அநுமதித்த விதை நெல்லை முறை செய்யாத வர்க்கத்தின் மீது பெரு நெருப்பாய் அவர்களோடு பெரும்போர் தொடுத்த நாவலர் அவர்களின் உக்கிர கர்ச்சனைகளும், நினைவுக்குக் கொண்டு வருகின்றன. ஆயினும்,

அவைகளை மறக்கச் செய்து நூற்றுண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இரு சரித்திர சம்பவங்கள் மேலோங்கி மனசைக் கொள்ளை கொள்ளுகின்றன.

இரு சம்பவங்களில் ஒன்று நல்லூரிலுள்ள இம் மண்டபத் தானத்தில் நிகழ்ந்தது. 1874 ஆம் ஆண்டில் இந்தக் காணியில் ஒருமடம் இருந்தது. கந்தசுவாமி கோவில் முதலாளி திரு. கந்தையமாப்பாணரின் வேண்டுகோளின்படி நாவலர் அவர்கள் குறித்த மடத்தில் தங்கியிருந்து, ஓதுவார்களைத் திருவாவடுதுறையிலிருந்தும் அழைத்து அவர்களோடு தாமும் ஒருவராய் தேவார பாராயணம் செய்தும், பிராமணர்களைக் கொண்டு வேத பாராயணம் செய்வித்தும் வியக்கத்தக்க வகையில் திருவிழா நடைபெறச் செய்தார்கள். அன்றி,

மாப்பாணர் அவர்களின் கேள்விப்படி வேதாகம விதிப்படி கோவிலை அமைப்பதற்கும் பூசைக் கிரமங்களை நடத்துவதற்கும் வேண்டிய

வளர்ச்சி 4-ம் பக்கம்

## இலங்கைச் சைவ சமயப் பாடப் பரீட்சை

### பெறுபேறுகள்

சைவ பரிபாலன சபையாரால் 1974 நவம்பர் 3ம் திகதி நடாத்தப் பெற்ற இலங்கைச் சைவ சமயப் பாடப் பரீட்சைப் பெறுபேறுகள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்கப் பெருதவர்கள் பரீட்சைக் காரியதரிசிக்கு அறிவிக்குக,

அகில இலங்கையிலிருந்தும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றினர். ஆண்களை விட பெண்களே கூடிய விகித சித்தியடைந்துள்ளனர். சைவ சமய அறிவின் தரம் வரவரக் குறைவாகக் காணப்படுவதாயும் வருங் காலத்தில் தரத்தை உயர்த்தக் கூடிய வழிவகைகளைச் செய்துதவுமாறும் பரீட்சைக் காரியதரிசி நமது நிருபரிடம் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

உ

சிதம்பரம் நாவலர் விழாவில்



# நடராஜர் நடனம்
# பரத நாட்டியப் பாடல்

என்னடி சொல்வேன்! நான்கண்ட
எழிலார் கண்ணுதல் நடனமடி! —சகியே

மன்றினில் புன்னகை பூத்தாண்டி!
மனங்கவர் கோலம் கொண்டாண்டி!
மாண்பார் ஆடல் புரிந்தாண்டி!
மருவதன் மகிமை சொல்வனடி! —சகியே

துன்னும் திசைகள் திடுதிடுக்கத்
துவண்டு சேடன் நடுநடுங்கப்
பதஞ்சலி புலிமுனி யொடுதுதிக்கப்
பத்தர் குழாங்கை சிரங்குவிக்க
நாரதர் தும்புரு சுதிமீட்ட
நந்தி துந்துபி இசைகூட்டக்
கங்கையும் திங்களும் முடியாடக்
கமழ்பூங் கொன்றைக் கண்ணியாடக்
குண்டலம் வலக்கா தினிலாடக்
குழையது இடச்செவி தனிலாடக்
கதிர்சடை கவினுற விரிந்தாடக்
கருநிறக் கண்டமும் ஒளிர்ந்தாட
ஓர்கரம் தோற்றும் துடியாட்ட
ஓர்கரம் அஞ்சலென் றறிவூட்ட
ஓர்கரம் ஒடுக்கும் தீநீட்ட
ஓர்கரம் மறைத்தருள் தாள்காட்டக்
கச்சொடு புலித்தோல் அரைக்கசைக்கக்
காற்கழல் கணீர்கணீர் என்றொலிக்க
மாண்புயத் தரவம் படமெடுக்க
மான்மழு சூழும் மருங்கடுக்கச்
சோதியாய் நீற்றொளி மெய்விளக்கச்
சூழ்ந்து கணங்கள் குதூகலிக்க
அகில சராசரம் அதிர்ந்தாட
அண்ட பகிரண் டமுமாடத
தேவர் திருவடி தொழுதாடத்
திருமா லோடயன் உடனாட
ஆனை முகன்வலம் வந்தாட
ஆறு முகன்மயில் அகன்றாட
அருகே நின்று சிவகாமி
அம்மன் கண்டு கொண்டாட
முயலகன் முதுகோர் காலூன்றி
மூல மலம் அறுத் தாட்கொள்ளப்
பொன்னம் பலத்துள் மற்றோர்கால்
பொற்புறத் தூக்கித் திருநடனம் —சகியே

தகதிமி தகதிமி தகதிம்தோம்
தகதிமி தகதிமி தகதிமிதோம்

திமிதக திமிதக திமிதகதோம்
திமிதக திமிதக திமிதகதோம்

தரிகிட தரிகிட தரிகிடதோம்
தரிகிட தரிகிட தரிகிடதோம்

ததிங்கிண ததிங்கிண ததிங்கிணதோம்
ததிங்கிண ததிங்கிண தோம்எனவே
— சகியே

மன்றுள் ஆடக் கண்டேண்டி!
மையல் அவன்மேல் கொண்டேண்டி!
என்றும் அவன்முகத் தெங்குவந்தாய்
என்னும் குறிப்பு மறவேண்டி!
பொன்னார் மேனிப் பேரழகன்
பூங்கழல் தஞ்சம் புகுந்தேண்டி!
மன்னும் அவன் அருள் பெற்றுய்ய
மகிழ்ந்து தில்லை வாழ்வனடி! —சகியே

சிதம்பரம். — தி. க. இராசேசுவரன்

# பண்புமிக்க பெரியார்

திரு. த. சோமசுந்தரம் அவர்கள்
( வழக்கறிஞர், சைவபரிபாலன சபைத் தலைவர் )

" கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்பது வள்ளுவம். திருவள்ளுவநாயனார் கூறியபடி கற்க வேண்டியவற்றைக் கற்றுத் தேர்ந்து கற்றபடி ஒழுகுபவர்கள் சிலரே. அச்சிலருள் வித்துவான் க. கார்த்திகேசு பி. ஏ. அவர்களும் ஒருவராவர். பண்புமிக்க பெரியார்; செந்தண்மை பூண்டொழுகிய சான்றாண்மையாளர். அவர் வாழ்க்கை எங்கள் எல்லோருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது.

அவர் வாழ்வு எங்களையும் வையத்து
வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும்.

" Lives of great men all remind us
That we can make our lives sublime ".

வித்துவான் கார்த்திகேசு அவர்களை ஏறக்குறைய 40 ஆண்டுகளாக அறிவேன். மாணவராய் இருக்கும் பொழுதே ஒழுக்கஞ் சிறந்தவராகக் காட்சி அளித்தார். அன்னாரின் நற்குண நற்பண்புகள் யாவரையுங் கவர்ந்தன. அவரோடு பழகிய எவரும் அவருடன் நட்புக் கொண்டு இறுதிவரை நட்புக்கு இலக்கணம் காட்டும் பெரியாராக அவரைப்போற்றி அன்னார் நட்பிற் பிரியாது உறவு கொண்டு வாழ்வர். தந்தை தாய் தமையன் இல்லாத எனக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய புத்திமதிகளை இடித்துரைக்கும் தன்மையவர். யாவரையும் நல்லாற்றுப் படுத்தும் நல்லார் அவர்.

இன்சொல் அன்றி வன்சொற் பேசியறியார். கடுஞ் சொற்களைக் கனவிலும் பேசார். நோதக்க சொற்களை விலக்கி வாழ்ந்தவர். அன்னார் செயல்களும் இன்பம் பயக்கும் செயல்களாகவே அமையும். யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தும் இவ்வுலகை நீத்தற்கு முந்திய ஓராண்டு காலமும் எங்களுக்கு அயலில் வசித்தார். அக்காலம் எமக்கொரு பொற்காலமாகும்.

சைவபரிபாலன சபையோடு நெருங்கிய தொடர்பு உள்ளவர் வித்துவான் கார்த்திகேசு. மேற்படி சபையின் சார்பில் சைவ சித்தாந்த வகுப்புகளை எனது வேண்டுகோளுக்கு இணங்கி சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கிழமை தோறும் நடாத்தி வந்தார். சிவஞானபோதம் கற்பித்த காலத்தில் பழைய உரையாசிரியர்களின் கருத்து வேறுபாடுகளை ஆராய்ந்து தெளிவாகத் தனது கருத்தை விளக்குவார். பழையன என்று எல்லாக் கருத்துக்களையும் ஏற்பவர் அல்ல அவர்.

சித்தாந்த சாத்திரங்களில் ஊன்றிய ஆராய்ச்சி உடைய அவர், சித்தாந்த கருத்துக்கள் எப்படி தேவார திருவாசகங்களிலும் ஏனைய திருமுறைகளிலும் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன என்பதைத் தக்க மேற்கோளுடன் விளக்கும் தகைமையவர். அன்னார் சித்தாந்த சாத்திரங்களை விளக்கும் முறையும், திருமுறைகளையும் ஏனைய நூல்களையும் மேற்கோளாகக் காட்டி தெளிவுறுத்தும் முறையும் பல அறிஞர்களை அவர் பால் ஈர்த்தன. பட்டதாரிகள், சட்ட

( வளர்ச்சி 4-ஆம் பக்கம் )

உ

சிறப்புப்பாயிரம்
கவிசிந்தாமணி புலவர்மணி
சோ. இளமுருகனர் அவர்கள் இயற்றியது

ஒன்ருய் வேரு யுடனய் நின்று
கன்றிய மன்னுயிர் சதிபெறும பொருட்டே
அம்மைகண் குளிர வருளொளி மன்றினுட்
செம்மை நடம்புரி செய்தியை விளக்கிடப
பண்ணெடு சிவணிய பழந்தமிழ் மரபின்
வண்ணப் பாட்டு வழங்கினன் யாரெனில்
தண்ணர் தமிழின் தகைநூற் புணரி
முந்துறப் பருகிய முத்தமிழ்க் கொண்டல்
சிந்துநீர் வரைப்பின் மாநில மாளும்
ஆங்கிலம் பயின்ற பாங்குறு புலவன்
பொய்யறு சைவமும் புகழ்மலி தமிழும்
வையக மீமிசை வரம்பொடு வளரச்
செவ்வன வரன்முறை செய்துவரு திறலோன்
சுன்னைக் குமார சுவாமிப் புலவனின்
நன்னயச் சிந்தையின் மன்னிய மணியாறு
கனக சுந்தரன் காதற் புதல்வன்
புனைமலர்ச் சோலைப் பூங்கொம் பிருந்து
வரிக்குயில் முருகன் றிருப்புகழ் பாட
அரிக்கணம் பண்செய அணிநடைத் தோகை
தாந்திமி தோமெனத் தரிகிட தோமெனத்
திருநடம் புரியும் திருத்தரு நல்லை
நாவலன் நல்லறங் காவல்செய் புனிதன்
அராவணி யண்ண லருளடி மறவா
இராசேசு வரனென வேத்திடு முலகே.

[ இது தி. க. இராசேசுவரன் அவர்கள் இயற்றிய "நடராஜர் நடனம் பரத நாட்டியப் பாடலு"க்கு வழங்கப்பட்ட சிறப்புப் பாயிரமாகும் ]

உ




# ஐந்தாங் குரவரடி!

[சுத்நானந்த பாரதியார் பாடல்]

நாவல ரென்கையிலே
நாவெல்லாந் தேனூறும்
ஜீவமலரினிலே — கிளியே!
சிவம்வந்து தித்திக்குமே. [1]

x x x

அஞ்சாத நெஞ்சுடையார்!
அறநெறி வாழ்வுடையார்
அஞ்சாத தொண்டுடையார்
— கிளியே!
சுதந்தர நாவலரே. [2]

x x x

ஆழக் கடலைப்போலே
அறிவுக் கடலுடையார்
ஈழத்துச் சிங்கமடி
— கிளியே!
இலக்கியச் சுரங்கமடி [3]

x x x

பைந்தமிழ் வியாசரவர்
பசுபதி நேசரவர்
ஐந்தாங் குரவரடி!
— கிளியே!
ஆருந்தரம் வாராரோ? [4]

## மரங்களின் பிறப்பே தனி

காற்று, மழை, வெய்யில், பனி இவையாவற்றையும் தாமே தாங்கி நம்மை இவற்றினின்று காக்கும் பாக்கியம் பெற்ற மரங்களை பிறருக்கெனவே உயிர் வாழும் மரங்களைப் பாருங்கள் ஆ ஆஹா, எவ்வாறு மேன் மக்களிடம் செல்பவர் வேண்டிய பொருளைப் பெருமல் திரும்ப மாட்டார்களோ அவ்வாறே வேண்டியதைத் தந்து எல்லா உயிரினங்களுக்கும் வாழ் வழிக்கும் இம் மரங்களின் பிறப்பே தலை சிறந்த பிறப்பு. இலை, மலர், கனி, நிழல், வேர், பட்டை மணம், பிசின், சாம்பல், கரி, துளிர் இவை யாவற்றாலும் அவை பிறருக்கு உதவுகின்றன. இவ்வாறே தமது உயிராலும், பொருளாலும், அறிவாலும், உரையாலும் மற்ற உயிரினங்களுக்கு எப்போதும் நன்மை புரிவதுதான் ஜீவனின் பிறவியை நிறைவிக்கிறது.

ஆதாரம்: அறிவுக்கனலே அருட்புனலே
வழங்கியோர்: மில்க்வைற்

## ஈரப்பலா

யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தினர் விவசாய மன்றங்களுக்கும், கழகங்களுக்கும் ஈரப் பலாக கன்றுகளை இலவசமாக வழங்கி வருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனர் அவர்கள் —

( முன் வளர்ச்சி — 21 )

கற்றமாந்தரது புறப்புத் தாம் உறுதியுணர்ந்துய்தற்குத் துணையாகலானும் அஃதேனைப் பிறப்புக்கள் போலாது பொய் கெட்டு மெய்யானர்க்கு நிகழ்வினுள தாயிறுதியாகலானும் இப் பிறப்பாகியும் பிறந்திளைத்தது. இறுதிக்கண் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேனென்றதன்கண் அடங்கக் கூறினர் இதனுளே நன்மக்கட் பிறப்பின் அருமையும் பெருமையும் பெறப்படும்.

இனிக் கல்லா மனிதராயென்னுது கல்லாய் மனிதராயெனப் பின்னுளின் ஓதைமாற்றி யோதிப்பயின்றுகொண்டு அப்பயிற்சி வலியான் உண்மையுணரமாட்டாது தாங்கண்டவாறே கல்லும் ஒரு பிறப்பென மலைந்துபொருள் கொண்டிடர்ப்படுவார். இன்று காறுமுளராயுளர் மலைக்கல்லு மற்றைக் கல்லும் உயிரியற்பொருளென மெய்ப்பிப்பார் உலகில் ஒருவருமிலர். அவை நால் வகைத் தோற்றத்தெழுவகைப் பிறப்புள்ளம் இன்னவென்றற்குக் காண்டளவை கருதவளவை உரையளவையொன்றுமில்லை ஒரு சாருயிர்க்குக் கல்லுச் சார்பெனப்படுமன்றிப் சார்பு பிறப்பெனப்படாது.

இங்ஙனமே பிருண்டும் ஓதைத்திரிபு கொண்டுணர துணிய மாட்டாதிடர்ப்படுதலும் உண்மையோதைக்குப் பொருள்காண மாட்டாதிடர்ப்படுதலும் இன்றுகாறுமுளவாகின்றன.

' இண்டியுமிருத்தியு மெனப்பலபிழைத்தும் என ஓதைபிறழ்ந் திருப்பதனையுணராதார் செவ்வியு பொருள்காண்டல் செல்லாமை ஓர்ந்திலர். பிறந்த குழந்தைக்குப் பன்னீர்யாண்டு காறும் தாயே யறிந்தொழுகுமாற்றல் போதாமையின் யாக்கை நிலையாமை பயக்கு மூறுகண் மேன்மேலுளவாமென விரிச்சி நூல் கூறும். அதனைக் கருதி,

“ ஆண்டுக டோறுமடைந்தவக் காலை
ஈண்டிய மிருத்தியு வெனைப்பல பிழைத்தும் ”

எனக் கூறியதனை மறந்ததனுன் வடசொற்பொருளை யிழந்து தமிழ்ச்சொல்லாக்கித் தடுமாறுதலாயிற்று.

மிருத்தியுவென்னும் வடசொற்குச் சாக்காடு விளைக்கத்தகு மிடையூறு என்பது பொருள். மிருத்தியுவை அரிட்டமெனவும் வடநூலார் வழங்குவர். இங்குக் கூறியது பாலாரிட்டம். தீண்டுதல், பெருகுதல் அஃதாவதிங்கு அடுத்தடுத்து மேன்மேல் வருதல் எனைப்பல, எவ்வளவோ பலவற்றையும் பிழைத்தல் - தப்புதல்.

ஒருதோழந் தொண்டருளன் என்பதற்கு ஒரு தோழமமளவாகிய தொண்டரையுடையன் என்பது பொருள். தோழமம: பண்டு வழங்கிய ஒரு பேரெண். இது பரிபாடலிலும் வந்துள்ளது. இதனை ஒரு தோழன் றொண்டருளனெனத் திருத்திப் பயின்று கொண்டு பொருடுளியமாட்டாதிடர்ப்படுதலுமுண்டு.

[ இஃதேண் டெண்ணும் பெயரென்பதனையுணர்த்தியர் புலவர்

பெருந்தகை உ. வே. சாமிநாதையர் [

“யானும் பொய்யென் னெஞ்சும்பொய் யென்னன்பும்பொய்
ஆனல் வினையே னழுதாலுன்னைப் பெறலாமே”

எனவும், 'கண்களிரண்டு மவன்கழல்கண்டு களிப்பன வாகாதே யெனவும் போந்த ஏகாரங்களை எதிர்மறைக் குறிப்பின் கண்வந்த வினவேகாரமெனக் கொண்டு பொருள் உரைக்க மாட்டாது. அழுதால் உன்னைப் பெறலாமெனவும் கணகளிரண்டு மவன்கழல்கண்டு களிப்பனவாகாதெனவும் வழுப்படப்பொருளுரைத்தலுங் கடியற்பாலது.

'' கொள்ளுங் கொல்லெனை யன்பரிற் கூய்ப்பணி '' எனச் செவ்விதாக்கி ஓதைகொண்டு என்னைத் தன்னன்பர் குழுவிற் கூப்பிலைவத்துக் குற்றேவல் கொள்ளுவானே கொள்ளானே என ஐயுறவு தோன்றப் பொருள்கொள்ளாது கொள்ளுங்கில்லெனை யன்பரிற் கூய்ப்ப பணியென ஓ தபடைத்துக் கொண்டு சொல்லும் பொருளுஞ் சொன்முடிபும் அறியாது தடுமாறுவாருமுளர்.

பணிகொள்ளுங் கொல்லென மாறுக. கொல் : ஐயக்குறிப்பின் வருமிடைச்சொல் குற்றிகால் மகன்கொல் என்புழிக்காண்க.

(வளரும்)

# நாவலர் பிள்ளைத்தமிழ்

[ எட்டாவது : சிற்றிற் பருவம். ]

## ஆக்கம் : — “பழைய பாணி” —

( முன் வளர்ச்சி — 63 )

மையார் விழிவண் டுருள்தருசெவ்
வதனும் புயத்து முத்துருள
மழலைச் செயூந்தீந் தமிழொழுகும்
வன்ன விதழ்ப்புன் னகைமுகிழ்கதும்
ஐயா எங்கள் மழவர்குலத்
தரசே அளியே முளந்தளிர்க்க
ஆர்வங் கொழிக்க அணைதருநின்
அன்பின் அருமைக் கென்கடவேம்
கையால் வருந்தி யாமிழைக்குங்
கவினுர் சிற்றில் மீதுறுநின்
**கடைக்கண் ணேக்கிற் குறும்பலரக்**
**காலுந் துடிக்கு மிதுவென் கொல்**
செய்யாச் செம்பொற் சிற்றடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெய்வத் திருவார் சிவகாமி
செல்வா! சிற்றில் சிதையேலே, (௨)

# சிவபக்திச் செல்வியின் பாராட்டு விழாவிற்

## சிவத்தமிழ்ச் செல்வியின் சிறப்புரை

நல்ல தமிழ்ப் பரம்பரை - சிறந்த சைவ பரம்பரை. இரண்டும் அமைந்த பண்டிதை அமிர்தம்பிகைக்குப் பாராட்டு விழா, அன்னூர் கொக்குவில் மஞ்சவனப்பதி (மஞ்சவலியாடு) முருகன் கோவிலிற் பெரிய புராணச் சொற்பொழிவு பூர்த்திசெய்த பொழுது நிகழ்ந்தது.

விழாவுக்குத் தலைமை வகித்த திரு. குமாரசுவாமிப் புலவர் (கொக்குவில்) திருவாட்டி அமிர்தாம்பிகை சதாசிவம் அவர்கள் தொடர்ந்து பெரிய புராணத்தைப் பற்றி மஞ்சவனப்பதியில் ஆற்றிய சொற்பொழிவுகளிலமைந்த எளிமையையும் பக்தி நயத்தையும் குறிப்பிட்டுச் சொற்பொழிவாளரை மனமுவந்து பாராட்டினர்.

மேற்படி விழாவிற் பலர் பாராட்டுரைகள் நிகழ்த்தினர்கள். 'சிவபக்திச் செல்வி' என்ற பட்டமும், வாழ்த்துப்பத்திரமும் பண்டிதைக்கு வழங்கப்பட்டன.

சிறப்புரை நிகழ்த்திய 'செஞ்சொற் செம்மணி' சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை ( செல்வி ) தங்கம்மா அப்பாக்குட்டி பாராட்டுரை நிகழ்த்துகையில் “பெரிய புராணம் கையிலேலே தொடங்கிறது; கையிலேயே முடிகிறது” என்று தொடங்கிப் பெரிய புராணத்தைப் பற்றி ஓரின்னுரையாற்றினர்.

ஏராளமான அடியார்கள் இவ்விழாவுக்குச் சமுகமளித்தனர்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழக்கு இல: 5660

1. பொன்னையா நேசதுரையும்
2. பெண் பூபதியும் இருவரும் 45 கச்சேரி நல்லூர் றேட்டு யாழ்ப்பாணம்
—வழக்காளிகள்

எதிராக

முத்துக்குமாரு இராமலிங்கம், கொட்டடி வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5660 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1975 ம் ஆண்டு ஜனவரி (தை) மீ 6ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபாய் 18958-ம் 20-5-63 தொடக்கம் 24-4-64 வரைக்கும் ரூபாய் 15000 க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 456-12 சதமும் இதில் 13-4-67 ல் கொடுபட்ட ரூபாய் 10000/-ம் கோட்டுச்செலவில் கொடுபட்ட ரூபாய் 250 ம் குறைக்கப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் மேற்கிறை பல்லுவிழித்தோட்டம வரகுச்செய்கை நிலப்பரப்பு 5¾ ம் வீடும் கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு சுந்தையா பெண் சுவயோகத்தின் ஆதனம் வடககு சங்கரப்பிள்ளை கனகுவின் ஆதனம் மேற்கு சபாபதி பெண் கனகேஸ்வரியின் ஆதனம் தெற்கு றேட்டு இது முழுவதும்

**க. சரவணமுத்து**

9, செட்டித்தெரு, கொம்மிசனரும் விலைமதிப்பாளரும்
நல்லூர் யாழ்ப்பாணம் 15-11-74

# அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு திருமதி தங்கம்மா ராசதுரையின் அடைவு கடையில் 1-7-72 தொடக்கம் 31-7-73 வரை அடைவு வைத்து மீட்கப்படாத 3 துண்டு நகைகளை 8-1-1975 புதன்கிழமை மு. ப. 8 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

“விதானை வளவு” சி. செ. மாரிமுத்து
சித்தன்கேணி, 9-9-74. கொம்மிசனரும் விலைமதிப்பாளரும்
224-6-12

**வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.**

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 6—12—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மு. மயில்வாகனம்

## திருக்கேதீச்சரப் புராணபடனம்

28.11-74 வியாழக்கிழமை திருகார்த்திகையன்று வேலணை திருஞானசம்பந்தர் மடாலாய் பரிபலான சபையாதரவில் திருக்கேதீச்சரத்தில் கேதிச்சரநாதனுக்கும் கௌரியம்பாளுக்கும் விசேட அபிடேகாரதனைகள் நிகழ்ந்தபின் திருக்கேதீச்சரப் புராணபடனம் நிகழ்ந்தது சைவப்பிரசாரகர் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்களும் பூநகரி இளைப்பாறிய உடையார் திரு. கு. அருளம்பலம் அவர்களும் பாராட்டுக் கடிதங்கள் அனுப்பியுள்ளார்கள்

## பஞ்சத்திற்க்கு காரணம்

பூநகரி சைவப் பெரியார் இளைப்பாறிய உடையார் முதுபெரும் சைவத்தொண்டன் கு. அருளம்பலம் அவர்கள் நமது நாட்டில் பஞ்சம் உண்டாயிருப்பதற்குரிய காரணங்களைப் பின்வருமாறு தெரிவிக்கின்றனர் மக்கள் அதனைப்படித்து அவருடைய புத்திமதிகளைப் பின்பற்றுவார்களாக

இவ்வருடம் மழையில்லை, வெய்யில் பனி மிகக்கோரமாக இருக்கின்றன அதர்மம் வரவர அதிகரித்து வருகிறது கடவுள் நம்பிக்கை கிடையாது கடவுளைக் காட்டுவீர்களாக என்றும் கேட்கும் காலமாய் விட்டது.

பஞ்சம் பசி தாண்டவமாடுகிறது எல்லாம் இறைவன் திருவிளையாடல். நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல பொல்லாக் குணம் போக்குதற்கே.

## சஷ்டி விரதம்

பருளாய் ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் கார்த்திகைத் திங்கள் 15 - ஆம் நாள் (30-11-74) சனிக்கிழமை விநாயக விரதம் ஆரம்பமாகியது. நாள்தோறும் பிற்பகல் 1-00 மணி தொடக்கம் 4 மணி வரை விநாயக புராண வசன படனமும் பிள்ளையார் கதையும் படிக்கப்படும்.

மார்கழித் திங்கள் 1ஆம் நாள் ( 16-12-74 ) திங்கட்கிழமை தொடக்கம் விநாயக புராணத்தின் உபதேச காண்டம், யோகி திரு. கார்த்திகேசு அவர்களின் விரிவுரையும் நடைபெறும்.

4ஆம் நாள் (19-12-74) வியாழக்கிழமையன்று விசேட ஆராதனைகளும், சைவப்புலவர் திரு. க. சிற்றம்பலம் அவர்களால், “விநாயக பரத்துவம்” என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ௵ கார்த்திகை௴ ௨௰௪ வெள்ளி

## மனிதன் மனிதனுக வாழவேண்டாமா?

அன்ருெரு நாள் ஐக்கிய நாடுகள் அமைப்பு மனித உரிமைகள் அடிப்படைச சுதந்திரம ஆகியன உண்டு; என்றும அவை இவை என்றும் அறை கூவி ஒரு ஆவணத்தை இயற்றிஞர்கள் அந்த நாளை இருபத்தைந் தாண்டுகளாக (10-12-74) ச் சிந்தை செய்து வநதிருக்கின்றனா. ஏட்டுச் சுரைக் காயாக இருக்கும் இந்த உறுதிப் பேச்சு எங் நாட்டுக்கும் உறுதி யளிக்கக்கூடியதாக இருத்தல் அன்ருே அவ் வுறுதி மோழிக்குப் பெறுமதியை அளிக்கும. ஆனல எத்தனையோ நாடுகள் இவ் வுரிமைகளை எவ்வகையிலும அனுபவிக்க முடியாதிருக்கினறனர்.

ஈழத் திருநாடு பழைய கலாச்சாரத்துக் குரிய தோன்றென்பதை யார் மறுகக முடியும்? எனவே ஶ்ரீலங்கை வாழ்வார் மனிதர்கள் ஆவார், அவர்களுக்கு எல்லா உரிமைகளும அடிப்படைச் சுதந்திரமும் தாமாகவே அமைதல வேண்டுமலலவா? அவ் விதமான மனிதர்களாக நாம் வாழ்கின்ருேமா? என்ற கேள்விககு நாமே மறுமொழி கோடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்ருேம்; காரணம அனைத்துலகமும் மனித உரிமைகள் நாளைப் பயன்படுத்தி நிலைமையை விளங்க வைக்கின்றனர். நாமோ இத் தினத்தை ஒரு கோணடாட்டத்துக் குரியதாகக் கணிக்கின்ருேமே யன்றி எங்கள் **உரிமைகள் எமக் கிருக்கின்றனவா?** என்பதை ஆராய்ந்து ஆவன செய்யாது காலததை அவமே கழித்து விடுகின்ருேம்!

இவ்வாண்டில் (10-12-74) **ஈழ மக்கள் இந்த உரிமைகளைச் சிந்தை செய்து** எந்த வகையில் இவற்றை அனுபவிக்க முடியும என்பதை ஆராய்வார்களாக.

## பசிப் பிணியும் நாவலரும்

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

ஏற்பாடுகளும் செய்து கொண்டிருந்தார்கள்.

நாவலர் அவர்கள் தொடங்கிய நல்ல காரியங்கள், ஙன்ன மேளங்களிலும் வாணவேடிக்கைகளிலும் மூழுகித் திளைத்து வீடிய வீடியத் திருவிழா நடைபெறச் செய்யும் நாட்டாண்மைப் பிரபுக்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் செய்த சூழ்ச்சிகளினுல் நாவலர் அவர்கள் மடத்தை விட்டு அகலும் நிலை நேர்ந்தது. மடததை அசுசிப் படுததிச் சொல்ல ஒண்ணுத துட்டத்தனம் செய்துவிட்டார்கள். இந்தச் சம்பவம் நடந்து நூருவது வருடம் இந்த வருடம்.

நாவலரை இழந்த இந்தக் காணி நூறு வருட காலமாக வரவரப் படுமோச நிலையை எய்துக கொணடேவநதது. 'இதற்கு மீட்சி இனி இலலை' என்ற எணணம அண்மையக் காலத்தில உண்டாயிருந்தது. அப்படியிருந்தும் நாவலா பெருமானின் ஆதம சகதி இநதக காணியை விட்டகலவிலலை எனபதொரு கருத்தை இநத அழகிய மணடபமும நாவலா சிலையும் விளககஞ்செய்து கொண்டிருக்கின்றன.

இக் காணியை அரிதிற் சுவீகரிதது இம மண்டபததை அமைத்து, சிலையை நிறுவி, இங்கே கூடும் சமயபக்தர்களிற சிலரையாவது நாவலர் சிலையை அணுகியதும் சமயக்கருத்துக்களையும ஆலய வழிபாட்டு முறைகளையும் சிந்திக்க வைப்பதோடு பெரும புண்ணியத்தை நாவலா சபை சம்பாதித்துக கொண்டது. இது அருமை! அருமை!

நாவலர் பெருமானின் ஆத்மீக ஆசி, நாவலா சபைககுக் கிடைப்பதாக திருமுருகன் திருவருள கைகூடுவதாக.

மேலே குறிப்பிட்டசரித்திர சம்பவங்களில் இரண்டாவதுவடககே நாவலர் அவா்கள தொடுத்த மிகப்பிரசித்தி வாய்ந்த வழக்குப் பற்றியது,

இச் சம்பவம் நூறு வருடத்துககு மேலே இருட் படலங்களால் மூடுண்டு கிடந்தது.

வழக்குத் தீாப்புப் புத்தகம் எவ்வாருே மறைந்து விட்டது, அதனுலே சரிததிரகாரர்கள் தம மனம போனவாறு வழக்கையுந் தீர்ப்பையுங் வைத்துக் கொணடார்கள்.

வழக்குப் புத்தகம் என்ன பேசியதென்பது இதுவரை யாருக்குநதெரியாது. யாவருமகுந் தெரியாது. யாவரும் கற்பனை உலகில வாழ்ந்து வந்தார்கள்.

இப்பொழுது இந்த 1974-ம் ஆண்டில் "வழக்குப் புத்தகம பேசியது இது" என்று கலாநிதி தனஞ்சயராசசிங்கம அவர்கள கண்டுபிடித்திருக்கிருர்கள, அது அருமபெறல முயற்சி. தக்க ஆதாரத்துடன் புத்தக வடிவில வெளிப்படுத்த ஆயததமாகயிருக்கின்ருர்கள். [illegible] வெளிவரும்,

குறித்த புத்தகம் பற்றிய விரிவான விமர்சனமொன்று புத்தகம் வெளிவருவதற்கு முன இன்றைய நிகழ்ச்சியின ஞாபகமாக வெளிவரலாம்.

நாவலர் சபை, நூறு வருட காலமாக அறியாதிருந்ததை அறிவிகக முன வந்த கலாநிதி அவர்களுக்கு தங்கள் நலலாசியை வழங்குவார்களாக.

## "ஊடுவதுன்ைேடுவப்பது முன்னை"

( திரு. சே. சின்னத்துரை ஏழாலை, சுன்னுகம் )

பாடிமால் புகழும் பாதமேயல்லால் பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீயாண்டாய் சிவபுரத்தரசே திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவதுன்னேடுவப்பது முன்னை உணர்த்துவன் தெனக்குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்வருகவென்றருள்புரியாயே.

மேலே குறிக்கப்படும் பாட்டு அழுது அடியடைந்தவரும், ஞானமார்க்கத்தை தழுவி வாழ்ந்த ஞான வடிவினரான மாணிக்கவாசக சுவாமிகளால் திருவாசகத்தில் கூறப்பட்டுள்ளது. மகா விஷ்ணுவினுல் புகழப்படும் பாதமே அல்லாமல் உலகில் பிறிதொரு பொருளில் எனக்குப் பற்று இல்லை. எம் பெருமானே தன்னை ஈர்த்து ஆண்டு கொண்டார். 'சுவாமி உன்னேடுதான் புலர்த்தலையும். உவர்த்தலையும் வைத்துக் கொண்டேன்' என்கிருர் மாணிக்கவாசக சுவாமிகள். இறைவன் பண்டும், இன்றும என்றுமுள்ளவர். அவர் தாமே தமக்கு உவமையானவர். அவர் பரிபூரணர்; அவர் நித்தியானந்தர்; அவர் நிர்குணநிமலர்; எங்கும் வியாபித்துள்ள வஸ்து. அவர் எல்லாமாய் அவற்றிற்கு அப்பாலுமாய் உள்ளவர். அவர் ஊனுகி, உயிராகி, உணர்வுமாகியுள்ளவர். அவர் எங்கும் நிறைகின்ற முன்னைப் பழம் பொருட்டு, முன்னைப் பழம்பொருள் புதுமைக்கு புதியவராகியுள்ளர். அவர் கனியும கட்டிபட்ட கரும்பினும் இனியவர் உடம்பாகிய சூத்திரப்பாவையை உள நின்று இயக்குகிறவர். அவர் தூணிலும், துரும்பிலும் இருப்பார். அவர் ல்லாத இடமில்லை. அவரின் அசையாமல் அசைக்கும் அசைவினுல் இயக்காமல் இருக்கும் இயக்கத்தினுல் சசல உயிர்க் கூட்டங்களும் இயங்குகின்றன. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. எமக்கு வருவதெல்லாம் ஆண்டவன் திருவுள்ளப்படி நடக்கின்றன. அவரின் திவ்விய குணங்களை நினைக்குந்தோறும் ஈறிலா அமுதமாகிய இன்பத் தேனை எமக்கு நல்குவார். அவர் ஊனக் காட்சிக்கரியவர். அவர் ஞானக் காட்சிக்கே சோதிக்குள் சோதியாய் தோன்றி எம்மை இரட்சிப்பார். ஆன்மாக்களின் மலத்தைப் போக்கி தம்மோடு அவர்களைச் சேர்ப்பார். அவர் எண் குணங்களை உடையாராயினும, அவர் குணங்கடந்த அற்புத கூத்தர். அவர் எங்குமாய் எல்லாமாயும் ஒன்ருய் உடனுய் வேருகியும். பாலில் வெண்ணெய போலவும், விறகிற் தீ போலவும், விளங்கும் அப்பெருமானை நம்பி நாம் வாழவேண்டும். பாசபந்தங்களாகிய புறச் சார்பற்று சார்புணர்ந்து சார்புகெட இறைவனடியை உறுதியோடும, அன்போடும் பணிவோடும சாரவேண்டும். எமபெருமான் தம் கல்யாண குணஙகளை எம்மிடத்தில் பதய வைப்பார். "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்பது உமாபதி சிவாச்சாரியார் திருவருட் பயனில் கூறும் பொன்மொழி. உலகப் பற்றை முற்ருகக் கழிக்க பற்றற்ருன் கழலிணை நாம் வணங்க வேண்டும, "பற்றுகபற்றற்ருன் பற்றினை பற்றுக பற்றுவிடற்கு" என்பது தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனரின் பொய்யாமொழி. இந்த சிறந்த உயரிய நிலையை எய்துவது ஒரு இலகுவான காரியமலல. பல்லூழி காலம் அரனை அர்ச்சிதத பழக்கவாசனையினுல்தான் இப்பேறு எமக்குக் கிட்டும். மும்மலர்த்தினுல் கட்டுண்ட உயிருக்கு இன்பமும், துன்பமும், இறப்பும், பிறப்பும் நிலையாத கொள்ளி வட்டமும், காற்ருடியும் போல மாறி மாறி வரும். விதைக் கிறபடி அறுபடும். முன் ஜனமங்களில் மனம், வாக்கு காயத்தினுல் ஈட்டிய புண்ணிய பாவத்திற்கேற்ப இன்ப துன்பங்களை நாம் நுகருகிருேம், புல்நுனியின் பனிபோல் நிலையிலாத உடலை நிலையுள்ளதென நினைந்தும் வைத்தநிதி, பெண்டிர்-

(வளரும்)



## பொற்ருள் நிலவினுர்

வித்துவான் க. வெள்ளைவாரணர் M. A.
( அண்ணுமலைப் பல்கலைக் கழகம் )

தில்லைப் பெருமான் திருவடிக்கே சிந்தை வைத்த
எல்லையிலாப் பேரன்பர் என்தோழர் — நல்ல
புலவனுர் **கார்த்திகேசனுர்** பொறருள்
நிலவினுர் எம்மையெலாம் நீத்து.

வித்துவான் க. கார்த்திகேசு B. A.. Dip-in-Ed அவர்களின் அந்தியேட்டி கிரிஜைகள் 5—12—74 அன்று அவர் பிறந்தகமான கரவெட்டியில் நடைபெற்றது. வித்துவான் அவர்களின் நினைவாக "சைவ விளக்கு" என்னும் நூற் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட்டது

## பண்பு மிக்க பெரியார்

[ 2-ஆம் பக்கத்து வளர்ச்சி ]

வல்லுநர், பண்டிதர்கள், வித்துவான்கள், ஆசிரியர்கள், வயோதிபர்கள், இளைஞர்கள் - எல்லோரும - அவர் தம் மாணுக்கராயினர்.

வேதாந்த மடத்தில் திருவாசகமும், நல்லை ஞானசம்பந்தராதீனத்தில் சிவஞானசித்தியாரும் கற்பித்து வந்தார். அன்னுரின் பிரிவால் உற்ருர் உறவினர் நண்பர் மாத்திரமன்றி அவரிடம் பாடம் கேட்ட மாணுக்கர் பலரும் கவலைக்குள்ளாகி விட்டனர். அவர் பிரிவால் சைவபரிபாலன சபையும், சபையின் ஓர் அரிய ஊழியராய் விளங்கிய பேரறிஞரை இழந்துவிட்டது. அன்னுரின் ஆன்மா சாந்தியடைய இறைவன் திருவடியை வணங்குவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org